# ஒரு பொருத்தமான ஆட்சிமுறை

மனித குலமும் நீதியான உலக அமைப்பை நோக்கிச் செல்லும் பாதையும்



ஐநா’வின் 75’வது ஆண்டுவிழாவுக்கான பஹாய் அனைத்துலக சமூகத்தின் ஓர் அறிக்கை

விரைவாக மாறிவரும் உலகளாவிய நிலவரங்கள், மனிதகுலத்தின் ஒன்றிணைப்பையும் கூட்டுச்சார்பினையும் மேலும் ஆழமாக உணர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டிய தருணத்தில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 75’வது ஆண்டு நிறைவு நாள் வருகின்றது. உலகளாவிய தொற்று நோய் பரவலினால் உருவாகி, தீவிரப்படுத்தப்பட்டுவரும் சீர்குலைவின் நடுவே உலகத்திற்குத் திடநிலையைக் கொண்டுவரக் கூடிய, அதன் குடி மக்களின் வாழ்வினை வளமூட்டக்கூடிய குறிப்பிடத்தக்க சமூக மாற்றங்கள் ஏற்படுவதற்கான எண்ணற்ற சாத்தியங்கள் திறக்கப்படுகின்றன. வரலாறு முழுவதும், கொந்தளிப்பான காலங்கள் கூட்டு விழுமியங்களையும் அவற்றின் அடிப்படை அனுமானங்களை மறுவரையறை செய்வதற்கான வாய்ப்புகளையும் வழங்கியுள்ளன. இக்காலமும் அவ்வாறே. பல்வேறு துறைகளில் ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்கு முறைகளுக்கும் அணுகு முறைகளுக்கும் தீவிரத் தன்மைமாற்றம் தேவையாகின்றது . இந்நிலை வரக்கூடிய கால் நூற்றாண்டு - அதாவது ஐநாவின் 75வது நிறைவு ஆண்டிலிருந்து அதன் முதல் நூற்றாண்டு நிறைவு வரையிலான கால் நூற்றாண்டு - மனித குலத்தின் எதிர்கால நிலையைத் தீர்மானிப்பது எத்துணை முக்கியம் வாய்ந்தது என்பதை அறிவுறுத்துகின்றது. அதிகரித்துவரும் கூட்டுக் குரலெழுப்பல், உலகளாவிய அமைதியை நோக்கி நாம் போக வேண்டிய கூட்டுப் பாதையில் முன்னேற்றம் காண தீர்க்கமான நடவடிக்கைகளைக் கோருகின்றன. இக்கோரிக்கைக்குப் பதில் அளிக்கப்பட வேண்டும்.

> “ஒவ்வோர் ஆன்மாவும் முழு மனித குலத்தின் நலம் விரும்பியாக ஆகும் பொழுதுதான் உண்மையான சமாதானமும் அமைதி நிலையும் உருவாகும்,”

மனித குடும்பம் ஒன்றே. இவ்வுண்மை உலகம் தழுவிய அளவில் பல கோடிக்கணக்கானோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அவ்வுண்மையின் ஆழமான தாக்கங்களானது நமது கூட்டு நடைத்தைகள் மேலும் உயரிய நிலையிலான சமூக, அரசியல் ஒற்றுமையை நோக்கிச் செல்ல, இப்பொழுது ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு முன் செல்லும் இயக்கமாக உருவெடுக்க வேண்டும். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு பஹாவுல்லா: “ஒவ்வோர் ஆன்மாவும் முழு மனித குலத்தின் நலம் விரும்பியாக ஆகும் பொழுதுதான் உண்மையான சமாதானமும் அமைதி நிலையும் உருவாகும்,” என பிரகடனம் செய்தார். தனக்கெதிராகவே பிளவுபட்டுள்ள ஓர் உலக சமுதாயத்தின் அபாயங்கள் பொறுத்துக்கொள்ள முடியாதவையாகும்.

கடந்த நூற்றாண்டு பல நடவடிக்கைகளைக் கண்டது -- குறைகளடங்கிய, இருப்பினும் முக்கியமான நடவடிக்கைகள் -- அவை சர்வதேச சமாதானத்தையும், எல்லோருடைய சுபிட்சத்தையும் பாதுகாக்கவல்ல ஒரு புதிய உலக அமைப்புக்கான அடித்தலத்தை உருவாக்கின. முதன் முறையாக மனித குலத்தால் எடுக்கப்பட்ட உலகளாவிய ஆட்சிமுறை முயற்சி, நாடுகளின் சங்கம் (League of Nations) என்னும் அமைப்பின்வழி இருபத்தைந்து வருடங்கள் நீடித்தது. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மேல் குறிப்பிட்ட கால அளவைவிட மூன்று மடங்கு நீடித்திருப்பது மனதில் பதியத்தக்கதாகும்.

நாம் தற்பொழுது முக்கியமான வரையறுக்கும் பணியை ஆற்ற வேண்டிய நுழைவாயிலில் நிற்கின்றோம். அப்பணியானது இதுவே: நாம் எல்லோரும் ஒரு தாயகத்தின் குடிமக்களே என்ற முழு உணர்வோடு நமது காரியங்களைக் குறிக்கோளுடன் ஒழுங்குப்படுத்துவதேயாகும்.

உண்மையில், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உலகின் அனைத்து நாடுகளையும் ஈடுபடுத்துவதற்கான ஒரு கட்டமைப்பும், மனித குலத்தின் பொதுவான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான ஓர் இணையற்ற மன்றமுமாகும். இருப்பினும் அண்மைய கால நிகழ்வுகள் மற்றும் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் ஏற்பாட்டுகள் இனியும் போதுமானதல்ல என்பதை, அலையலையாக அதிகரித்து வரும் இடைத்தொடர்புடைய அபாயங்கள் நிரூபிக்கின்றன. ஆகவே ஒருமைப்பாடும் ஒருங்கிணைப்பும் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். முன்னேறிச் செல்வதற்கான ஒரே உருப்படியான வழி, மேலும் வலுவான உலகளாவிய ஒத்துழைப்பு முறைமையில் அடங்கும். இந்த 75'வது ஆண்டு நிறைவு, அனைத்துலகச் சமூகம் தன்னை மேலும் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தி கொள்ளவும், வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கான அளவுகளையும் கருத்தில் கொள்ளவும் ஓர் அருமையான நேரமாகும்.

சில நேரங்களில், சட்டங்கள் அடிப்படையிலான அனைத்துலக அமைப்பு எனும் கருத்தையே மறுக்கும் எதிர்வாதங்களால் மறைக்கபட்டுள்ளன. இருப்பினும் பின்னடைவுக்குரிய இக்காலம், உலக சமூகத்தை இன்னும் வலுவான ஒற்றுமைக்கு எடுத்துச் செல்லும் பரந்த வரலாற்று செயல்முறைகளில் உட்பதிக்கப்பட்டுள்ளது. மனித வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும், மேலும் பலக்கியமான ஒருமைப்பாட்டு நிலையை அடைவதற்கு முயல்வது பொருத்தமானது மட்டுமன்றி அது தேவையாகவும் அமைகின்றது. புதிய மற்றும் மேலும் நெருக்கடியான சவால்கள் தோன்றுகின்றன. புதிய, மேலும் அவசரமான சவால்கள் வெளிப்பட்டு, சமூக அரசியலமைப்பானது, காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, மேலும் அதிகமான (தரப்புக்களை) உட்படுத்தல், ஒத்திணைவு, உடனுழைப்பு ஆகியவற்றின் மூலம் புதிய

ஏற்பாடுகளை உருவாக்க கட்டாயப்படுத்தப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையின் கோரிக்கைகள், நடைமுறையில் இருக்கும் கட்டமைப்புக்களை, தங்களின் ஆற்றலுக்கும் மேற்பட்ட, நாடுகளிடையே கலந்துரையாடல்களை ஒருங்கிணைக்கவும், சச்சரவுகளுக்குத் தீர்வு காணும் பயனளிக்கக் கூடிய முறைமைகளையும் கடைப் பிடிக்கத் தூண்டுகின்றன. ஆகவே, நாம் தற்பொழுது முக்கியமான வரையறுக்கும் பணியை ஆற்ற வேண்டிய நுழைவாயிலில் நிற்கின்றோம். அப்பணியானது இதுவே: நாம் எல்லோரும் ஒரு தாயகத்தின் குடிமக்களே என்ற முழு உணர்வோடு நமது காரியங்களைக் குறிக்கோளுடன் ஒழுங்குப்படுத்துவதேயாகும்.

***

மனித குடும்பத்தின் ஒருமையினை அங்கீகரிப்பது, எல்லோரும் ஒரே சீரான தன்மைக்கு வர வேண்டும் என்பதற்கான அழைப்போ ஸ்தாப்பிக்கப்பட்டுள்ள பல்வேறு ஆட்சி முறைமைகளைக் கைவிட வேண்டும் என்ற கோரிக்கையோ அல்ல. மனித குலத்தின் ஒருமைத் தன்மையினைத் தக்கவாறு மதித்துணர்தல், அதன் இயல்பான பல்வகைத் தன்மையை ஒப்புக்கொள்ளுதலாகும். இன்று தேவையானது என்னவெனில், உலக முழுதும் காணப்படும் பல்வேறு முறைமைகளையும் கலாச்சாரங்களையும் பேணும் அதே வேளையில், எல்லா நாடுகளின் ஏகமனதான ஆதரவைப் பெறக்கூடிய பொதுவான விழுமியங்களையும்

மனித குலத்தின் ஒருமைத் தன்மையினைத் தக்கவாறு மதித்துணர்தல், அதன் இயல்பான பல்வகைத் தன்மையை ஒப்புக்கொள்ளுதலாகும்.

கோட்பாடுகளையும் கொண்ட ஒரு தொகுப்பினை ஏற்றுக் கொள்வதாகும். இப்பொதுவான விழுமியங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்கனவே ஆதரவு ஓரளவு வழங்கப்பட்டிருப்பது, ஐநாவின் உலக செயல் திட்டங்களுக்குத் தந்துள்ள ஆதரவின் மூலம் தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக சர்வமய மனித உரிமைகள், வறுமையை ஒழிக்க வேண்டிய கட்டாயம், பேணப்பட்ட சுற்றுப்புற வரம்புக்குள் வசிக்க வேண்டிய தேவை ஆகியவையாகும். ஆயினும், நாம் இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அத்தகைய இலட்சியங்களின் சவால்மிக்க தாக்கங்களை நாம் எதிர்நோக்க கடமைப்பட்டுள்ளோம்.

பல்வகை அணுகுமுறைகளை அனுமதிக்கக் கூடியதும் ஒற்றுமைக்கும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதி நெறிமுறைக்கும் கடப்பாடு கொண்டு எழுப்பப்பட்ட ஒரு கட்டமைப்பு, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளை எண்ணற்ற ஏற்பாடுகளிலும் வடிவமைப்புகளிலும் அமுலாக்குவதற்கு வழிவகுக்கும். அத்தகைய கட்டமைப்புக்குள், அரசியல் அமைப்பு வேறுபாடுகள், சட்ட முறைமை வேறுபாடுகள் மற்றும் சமூக அமைப்பு வேறுபாடுகளும் எதிர்ப்பு முனைகளாக நிற்காமல், புதிய தீர்வுகளுக்கும் அணுகுமுறைகளுக்கும் தோற்றுவாயாக அமையக்கூடும். எந்த அளவு நாடுகள் ஒன்று மற்றொன்றிடமிருந்து கற்றுக்கொள்ள முயல்கின்றனவோ அந்த அளவு வேரூன்றிய பழக்கங்களான போட்டி, பழி சுமத்துதலுக்குப் பதிலாக, ஒத்துழைப்பும் ஆராய்தலும்கொண்ட பண்பாடு உருவாவதோடு, பின்னடைவுகளையும் தவறான நடவடிக்கைகளயும் கற்றல் செயல் முறையின் தவிர்க்க முடியாத அமசங்களாகத் திறந்த மனத்தோடு ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கு உருவாகும்.

உலகலாவிய கூட்டுச் சார்பினை உண்மையாக அங்கீகரிப்பது, எல்லோர் மீதும், எந்த ஒரு வேறுபாடின்றி, உண்மையான அக்கறைகாட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்குகின்றது. வெளிப்படையில் மிக எளிதானபோதிலும், இக்கொள்கையின் தாக்கம் நமது முந்துரிமைகளை ஆழமான மறுசீரமைப்பு செய்ய வேண்டியதைக் கட்டாயமாக்குகின்றது. அடிக்கடி பொது நலனை முன்னேற்றமடையச் செய்வது, இரண்டாவது குறிக்கோளாக அணுகப்படுகின்றது – அது பாராட்டப்பட வேண்டியதுதான், ஆனால் அது மற்ற குறுகிய தேசிய அக்கறைகள் பத்திரப்படுத்தப்பட்ட பிறகே மேற்கொள்ளப்படும் ஒன்றாகின்றது. இது கட்டாயமாக மாற வேண்டு , ஏனெனில் மனித குலத்தின் எந்த ஒரு பகுதியும் மக்களின் சமூக நலன், அதன் மொத்த மக்களின் நலனோடு ஒன்றர பிரிக்கவியலாததாகும். எந்த ஒரு செயல் திட்டத்தைப் பற்றிய கலந்தாலோசித்தலின் ஆரம்பக்குறி அத்திட்டத்தின் தாக்கம் எவ்வகையில் சமூகத்தின் எல்லா பகுதி மக்களையும் பாதிக்கும் என்பதாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பொருட்டு தலைவர்களும் கொள்கை தீர்மானம் செய்பவர்களும் அந்தச் செயல் திட்டத்தின் - அது உள்ளூர், தேசிய அல்லது அனைத்துலக அளவிலான செயல் திட்டமாக இருப்பினும் அதன் நன்மை தீமைகளை- எடைபோட வேண்டிய ஒரு முக்கிய கேள்வியை அவர்கள் எதிர் நோக்க நேரிடும், அதாவது: எடுக்கக் கூடிய முடிவு மனித குலம் முழுமையின் நலனை முன்னேற்றம் அடைய வைக்குமா?

கடந்த காலங்களில், தேசிய சுய உரிமை அடிப்படையிலான கருக்கோள்கள் கொண்டுவந்த ஆதாயங்கள் இருந்தபோதும், தற்போதைய நிலை முன்பைவிட ஒரு முழுமையான ஒட்டிணைப்பான அணுகு முறையை ஆய்வு செய்வதையும் முடிவுகள்

எடுப்பதையும் கோருகின்றது. உள்ளூர் அல்லது தேசிய அளவிலான கோட்பாடுகள் எவ்வகையில் உலகளாவிய தாக்கங்களை உருவாக்குகின்றன? எத்தகைய தேர்வுகள் கூட்டுச் சுபிட்சத்திற்கும், தொடர்ச்சியான சமாதானத்திற்கும் பங்களிக்கின்றன? எந்த நடவடிக்கைகள் மேன்மைத் தன்மையையும் மனிதனின் தன்மதிப்பையும் பேணுகின்றன? மனித குலத்தின் ஒருமைத் தன்மை உணர்வை முடிவுகள் எடுக்கும் செயல்முறையில் புனையப்படும்போது, தேசங்கள் ஒன்றை ஒன்று உண்மையான சகபங்காளிகளாக, இந்தப் பூமியின் பாதுகாவலர்களாகக் காண்பதும், அதன் மக்களின் சுபிட்சத்தை உறுதிப்படுத்துவதும் சுலபமாகும்.

தலைவர்கள் தங்கள் முன்னிருக்கும் கோட்பாடுகளின் தாக்கங்களைக் கருத்தில் கொள்ளும்பொழுது , அவர்கள் மனித ஆன்மீகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதுதான் மனிதனின் அடிப்படைப் பண்பு. அது வாழ்வின் அர்த்தம் காணவும் ஆழ்நிலை அடையவும் இலட்சியம் கொண்டுள்ளது. மனித வாழ்வின் இந்தக் காணவியலா அம்சங்களைப் பொதுவாக தனி மனிதனின் நம்பிக்கையைச் சார்ந்த ஒன்றெனக் கொள்கை வகுப்புவர்களும் நிர்வாகிகளும் அதைத் தள்ளி வைத்துவிடுகிறார்கள். ஆனால், லௌகீக, ஆன்மீக மற்றும் நெறிமுறை முன்னேற்றத்திலிருந்து பிரிக்கப்பட்டால் அனைவருக்குமான முன்னேற்றத்தை அடையமுடியாது என்பதை அனுபவம் காட்டுகிறது. உதாரணமாக, அண்மைய பத்து ஆண்டு காலங்கள் ஏராளமான மக்களுக்குப் பொருளாதார வளர்ச்சியைக்

லௌகீக, ஆன்மீக மற்றும் நெறிமுறை முன்னேற்றத்திலிருந்து பிரிக்கப்பட்டால் அனைவருக்குமான முன்னேற்றத்தை அடைய முடியாது ....

கொண்டு வந்துள்ளன என்பதில் சந்தேகமே இல்லை. இருப்பினும் அவ்வளர்ச்சி நீதி, நியாய நெறிகளைப் புறக்கணித்த காரணத்தால், ஒரு சிறு பான்மையினர் அளவு மீறி அதன் பலன்களைப் பெறுகின்றனர். மற்றவர்கள் கதியற்ற நிலையில் இருக்கின்றனர். வறுமையில் வாழ்பவர்கள் உலக பொருளாதார சரிவு ஏற்படும் பொழுது மிக அதிகமாக பாதிக்கப்படுவதனால், அது நடைமுறையில் உள்ள ஏற்றத் தாழ்வு நிலையை மோசமாக்கி, அல்லலை அதிகரிக்கின்றது. மனித சமூகத்தின் வளர்ச்சியை முன்னேற்றுவதற்கான ஒவ்வொரு முயற்சியும், அது லௌகீகம் சார்ந்ததாக மட்டுமே இருந்தாலும், அது அடிப்படை நெறி அனுகூலங்களைச் சார்ந்துள்ளது. ஒவ்வொரு கோட்பாடும் மனிதனின் இயல்பை பற்றிய நம்பிக்கையைப் பிரதிபலிப்பதோடு, சமூகக் குறிக்கோள்களை முன்னேற்றும் நற்பண்புகள் மற்றும் வழங்கப்படும் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உள்ள இணைப்பையும் பிரதிபலிக்கின்றது. இந்த அனுமானங்கள், எந்த அளவு எடுக்கப்படும் தீர்மானங்கள் எல்லோருக்கும் பயனளிக்கும் என்பதை உறுதிப்படுத்தும்? ஆகவே, இந்த அனுமானங்களைக் கவனத்துடனும் நேர்மையுடனும் பரிசீலிக்க வேண்டும். லௌகீக வளர்ச்சியை, ஆத்மீக, சமூக வளர்ச்சியோடு உணர்வுப்பூர்வமாக இணைத்தால்தான், மேலும் நல்லதோர் உலகத்தை உருவாக்குவோம் என்ற வாக்கு நிறைவேறும்.

***

மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட, உண்மையான ஒத்துழைப்பு மற்றும் மனப்போக்கு கொண்ட சர்வதேச உறவுகள் முன்னேற்றம் அடைவதற்கு,  உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி, புத்தாக்கப்பட்ட, திருத்தியமைக்கப்பட்ட, உலக அமைப்பை நிறுவுவதற்கான ஒரு செயல்முறை இறுதியில் தேவைப்படுகின்றது. ஒரு காலத்தில் சர்வதேச ஒத்துழைப்பு கருத்தளவில் மட்டும் உள்ள காட்சியாகக் காணப்பட்டது.

ஆனால், தற்பொழுது மனிதகுலம் எதிர் நோக்கும்  தெளிவான, அதி முக்கியமான சவால்களினால் அத்தகைய ஒத்துழைப்பு நடைமுறை தேவையாகிவிட்டது. அத்திசையை நோக்கிச் செல்லும் பாதை பயனுள்ளதாக அமைய வேண்டுமானால், வழக்கமான முட்டுக்கட்டை  நிலை, நகர இயலா நிலை கைவிடப்பட்டு, உலகளாவிய பண்பு நெறியை கடைப்பிடிக்க வேண்டும். கலந்தாலோசித்தல் செயல் முறைகள் மேலும் பெருந்தன்மை, நியாயம், தோழமையுணர்வு ஆகிய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுவதோடு, வேரூன்றிய முடிவு நிலை, குறுகிய நலன்கள் இவற்றின்பால் கொண்ட பற்றுகளால் தூண்டப்படாது, சிக்கலான பிரச்சனைகளை ஆழமாகப் புரிந்து கொள்ள கூட்டாக ஆய்வு செய்யும் ஆர்வம் வேண்டும். பொது நலத்திற்கு ஒவ்வாத குறிகோள்களைத் தள்ளி வைக்க வேண்டும். இந்த நெறிமுறை முதன்மையானதாக ஆகும்வரை, நீடித்த வளர்ச்சி கைநழுவிடும்.

ஒரு காலத்தில் சர்வதேச ஒத்துழைப்பு கருத்தளவில் மட்டும் உள்ள காட்சியாகக் காணப்பட்டது. ஆனால், தற்பொழுது மனித குலம்  எதிர் நோக்கும்  தெளிவான, அதி முக்கியமான சவால்களினால் அத்தகைய ஒத்துழைப்பு நடைமுறை தேவையாகிவிட்டது.

மேல் குறிப்பி ட போக்கு, வளர்ச்சிக்குச் செயல்முறை சார்ந்த ஓர் அணுகு முறையை வலுப்படுத்தி, படிப்படியாகப் பலத்தின் அடிப்படையில் வளர்ச்சி கண்டு, தொடர்ச்சியாக மாறிவரும் நிலைகளுக்குப் பதிலளிக்கவும் முடியும். முன்மொழியப்பட்ட எந்த ஒரு செயல் திட்டத்தின் தகுதியை நியாயமாகவும், உணர்ச்சி வசப்படாமலும் மதிப்பீடு செய்யுக்கூடிய கூட்டு ஆற்றல் வளர்ச்சி அடையும் பொழுது, உகந்த பல்வேறு சீர்திருத்தங்களைப் பற்றி மேலும் கலந்தாலோசிப்பது தகுந்ததாகும். உதாரணமாக, ஐநா பொதுச் சபையின் இரண்டாவது மன்றத்தை ஸ்தாபித்தல் அந்தச் சீர்திருத்தங்களில் ஒன்றாகலாம். இம்மன்ற பிரதிநிதிகள் நேரடியாக வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். ஓர் உலகப் பாராளுமன்றம் எனக் கருதப்படும் அம்மன்றத்தின் வழி அந்த உலக ஸ்தாபனத்தின் சட்டபேறினையும் மக்கள் அதனுடன் கொள்ளும் தொடர்பையும் வலுப்படுத்த உகந்ததாக இருக்கும். வருங்கால உலகப் பிரச்சனைகள் அவை ஒன்றின் வழி, வரக்கூடிய தலைமுறைகளை எவ்வாறு கோட்பாடுகள் பாதிக்கக்கூடும் என்ற கருத்துக்களை நிலையாகச் செயல்படுத்தலாம், அவை பல்வகை பிரச்சனைகளின்பால் கவனம் செலுத்தலாம் – உதாரணமாக உலகளாவிய நெருக்கடிகளை எதிர் நோக்குவதற்கான தயார் நிலை; நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது; கல்வியின் எதிர்காலம்; வேலைவாய்ப்பு போன்ற பிரச்சனைகள் அவற்றில் அடங்கலாம். இயற்கை உலகைச் சார்ந்த சட்ட கட்டமைப்பினை வலுவாக்குவது பல்லுயிர், பருவநிலை, சுற்றுச்சூழல் குறித்த நிர்வாக முறைகளுக்கு ஒத்திசைவும் ஊக்கமும் அளித்து, பூமியின் இயற்கை வளங்களைக் கண்காணிக்க ஒரு பொது முறைமையை உருவாக்க வலுவான அஸ்திவாரத்தைத் வழங்கும். சமாதானத்தை மேம்படுத்தவும், நிலைநாட்டவும் ஒட்டுமொத்த

உள்கட்டமைப்பைச் சீர்திருத்தம் செய்வதோடு, பாதுகாப்பு மன்றத்தையும் சீர்திருத்துவது, வழக்கமான வாதமும் முட்டுக்கட்டையும் சார்ந்த முறைகள் நீக்கப்பட்டு, அச்சுறுத்தும் மோதல்களுக்கு உறுதியான தீர்வு எடுக்க வழிவகுக்கும். இத்தகைய தொடக்க முயற்சிகள் அல்லது இவற்றுக்கு நிகரான புத்தாக்கங்கள் நடைபெற அதிகமான மையப்படுத்தப்பட்ட கலந்தாலோசித்தல் தேவைப்படுவதோடு, அவை ஒவ்வொன்றும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் சட்டபூர்வ அங்கீகாரம் பெறுவதற்கும் ஏகமனதான ஒப்புதல் தேவையாகும். நிச்சயமாக, இவை மட்டுமே மனித குலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதல்ல; இருப்பினும், எந்த அளவுக்கு அவை தற்பொழுது இருக்கும் நிலையை செம்மைப் படுத்துகின்றனவோ அந்த அளவு அவை ஒவ்வொன்றும் உண்மையான பரிணாம வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும் ஒரு செயல்முறைக்கு அதன் பங்கினை ஆற்றிடும்.

சர்வதேச சமூகம் , வன்மையும் ஊழலும் மங்கி அமைதியும் நல்லாட்சியும் ஓங்கி வளரக்கூடிய மற்றும் ஆண் பெண் சம நிலை சமூக வாழ்வின் எல்லா அம்சங்களிலும் பிரதிபலிக்கும் ஓர் உலகை உருவாக்குவதைக் கடப்பாடாகக் கொண்டுள்ளது. ஆனால், அத்தகைய உலகம் இன்னும் உருவாகவில்லை. ஆகவே, உலக வளர்ச்சித் திட்டங்களில் பதிவு செய்யப்பட்ட குறிக்கோள்களை நோக்கி முன்னேறுவதற்கு, விழிப்புணர்ந்த நோக்கு நிலையுடன் ஆராய்ச்சி, ஆய்வு, புத்தாக்கம் ஆகியவற்றை வரவேற்க வேண்டும். இச்செயல்முறைகள் படிப்படியாக மலர்ந்து வருகையில், ஐநா சாசனத்தில் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட தார்மீகக் கட்டுப்பாட்டை இன்னும் அதிகமாக நாணயத்துடன் கடைப்பிடிப்பது

அவசியமாகும். சர்வதேச சட்டத்தை மதிப்பது, அடிப்படை மனித உரிமைகளை நிலை நாட்டுவது, ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகளைக் கடைபிடிப்பது – எந்த அளவு இத்தகைய கடப்பாடுகள் நடைமுறையில் கௌரவிக்கப்படுகின்றதோ அதன் மூலமே ஐநாவும் அதன் தேச உறுப்பினர்களும் உலக மக்கள் முன் நாணயத்தையும் நம்பகத்தன்மையையும் நிரூபிக்க முடியும். இல்லாவிடில், எவ்வளவிலான நிர்வாகச் சீரமைப்பும் நம் முன் வரிசையாக இருக்கும் நீண்ட கால சவால்களுக்குத் தீர்வுகாண முடியாது. “வார்த்தைகள் செயல்களின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும், ஏனெனில் செயல்களே வார்த்தைகளின் வாய்மைக்கான சோதனை,” என பஹாவுல்லா அறிவித்துள்ளார்.

***

ஐநாவின் நூற்றாண்டு நிறைவை அடையவிருக்கும் எஞ்சிய வருடங்கள், அளப்பரிய வாய்ப்புகளுக்கான காலக் கட்டமாக அமைகின்றன. முந்தைய காலங்களில் கனவிலும் காணாத அளவிற்கு ஒத்துழைப்புச் சாத்தியமாகின்றது, வளர்ச்சிக்கான வாய்ப்புகளின் கதவுகள் ஒப்பிடவியலா வகையில் திறக்கப்பட்டுள்ளன. இருப்பினும் பலனளிக்கும் உலகளாவிய ஒருங்கிணைப்புக்கான ஏற்பாடுகளை முடிவெடுப்பதில் தோல்வி கண்டால், அண்மைய இடயூறுகளிலிருந்து தோன்றிய விளைவுகளைவிட மேலும் கொடூரமான விளைவுகள் – பேரழிவைத் தரக்கூடிய விளைவுகள் – ஏற்பட சாத்தியம் உண்டு. ஆகவே, சர்வதேச சமூகம்

முந்தைய காலங்களில் கனவிலும் காணாத அளவிற்கு ஒத்துழைப்புச் சாத்தியமாகின்றது, வளர்ச்சிக்கான வாய்ப்புகளின் கதவுகள் ஒப்பிடவியலா வகையில் திறக்கப்பட்டுள்ளன.

எதிர்நோக்கும் பணி இதுவே – சர்வதேச அரசியல் சாதனங்களும் அதிகாரமும் மேன்மேலும் ஒத்துழைப்புக்கும் ஒற்றுமைக்குமான திசையில் திருப்பப்பட வேண்டும்.

ஐநாவின் நூற்றாண்டு நிறைவின் போது, வரக்கூடிய நூற்றாண்டுகளில் தொடர்ச்சியான வளர்ச்சிக்குத் தேவையான ஓர் உலகளாவிய ஒழுங்கமைப்பை உருவாக்குவதற்கு யதார்த்தமான ஒரு செயல்முறையை இயக்கியுள்ளோம் என நம்பிக்கையுடன் நமது பொதுவான தாயகத்தின் எல்லா குடிமக்களின் எதிர்ப்பார்ப்பு சாத்தியமாகுமா? இந்த எதிபார்ப்புதான் சர்வதேச பஹாய் சமூகத்தின் நம்பிக்கையும், அதன் முயற்சிகளின் குறிக்கோளுமாகும். நீண்ட காலத்துக்கு முன்பு, தலைவர்களைப் பற்றியும் மனித விவகாரங்களின் நடுவர்களைப் பற்றியும் குறிப்பிடுகையில், பஹாவுல்லா அவர்களுக்கு விடுத்த அழைப்பினை நாங்கள் இங்கு எதிரொலிக்கின்றோம்: “அவர்கள் கூடி ஆலோசிப்பதுடன், ஆர்வத்துடனும் முழுமையாகவும் விவாதித்து நோயுற்ற, மிகவும் பாதிப்பிற்குள்ளான உலகத்திற்குத் தேவையான பரிகாரத்தை வழங்கிடுவார்களாக.”

பதிப்புரிமை 2020 பஹாய் அனைத்துலக சமூகம்

பஹாய் அனைத்துலக சமூகம்
866 United Nations Plaza, Suite 120
New York, NY 10017, USA